# கொண்டைக்கடலை நடவு செய்யலாம்

இந்தியாவில் பயிரிடப்படும் பருப்பு வகைகளில் கொண்டைக்கடலை முக்கியமான பங்கு வகிக்கிறது. அக்டோபர் - நவம்பர் மாதத்தில் விதைக்கப்பட்டு ஜனவரி – பிப்ரவரி மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது.

இந்திய வேளாண் அமைச்சகத்தின், இரண்டாவது முன்னறிவிப்பு மதிப்பீட்டு அறிக்கையின் படி 2014-15ஆம் ஆண்டில் கொண்டைக்கடலை உற்பத்தி 8.28 மில்லியன் டன்னாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு உற்பத்தியை விட 13 சதவீதம் குறைவாகும். ஆகவே மே, 2015 முதல் கொண்டைக்கடலை விலை உயரத் துவங்கி தற்போது குவிண்டாலுக்கு ரூ.5000 முதல் 5500 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்திய உற்பத்தியில் மத்தியபிரதேசம் 43 சதவீதம் பங்களித்து முதலிடத்திலும், இராஜஸ்தான் (13%), மகாராஷ்டிரா (11%), கர்நாடகா (5%), ஆந்திரபிரதேசம் (7%) மற்றும் உத்திரபிரதேசம் (9%) ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களையும் பிடித்துள்ளது.

2013-14ல், தமிழ்நாட்டில் 8908 எக்டர் பரப்பளவில் கொண்டைக்கடலை பயிரிடப்பட்டு 5823 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் விளைவிக்கப்படும் கொண்டைக்கடலையில் நாட்டு இரகம் (கருப்பு) 75 சதவீதமும், காபூலி இரகம் 25 சதவீதமும் பயிரிடப்படுகிறது. திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் மொத்த கொண்டைக்கடலை உற்பத்தியில் 90 சதவீதம் பங்களிக்கின்றன.

தற்போது இருப்பிலிருந்து சந்தைக்கு வந்து கொண்டிருக்கும் கடலை வரத்து டிசம்பர் மாத இறுதி வரை நீடிக்கும். நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் மற்ற உற்பத்தியாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் வரத்து மற்றும் உள்நாட்டில் பிப்ரவரி – மார்ச்சில் எதிர்பார்க்கப்படும் புதிய வரத்தினால் விலை நிலையாக இருக்கும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், உடுமலைப்பேட்டை ஒழுங்கு முறை

விற்பனைக் கூடத்தில் நிலவிய கொண்டைக்கடலை விலை விவரங்கள் பற்றிய ஆய்வு மற்றும் வர்த்தக பொருளாதார ஆய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் நடவு செய்யும் கொண்டைக் கடலைக்கு வரும் 2016ஆம் ஆண்டு பிப்ரவரி – மார்ச் மாத அறுவடையின் போது குவிண்டாலுக்கு ரூ.4,500 – 4,700 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் விவசாயிகள் நடவு முடிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள:</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்-641003

தொலைபேசி- 0422-2431405


**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்

பயறுவகைத் துறை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோயமுத்தூர்-641003

தொலைபேசி: 0422-2450498